**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.1040/ஒபக/2024, நாள். 09.07.2024**

.....

பொருள் வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் – மாவட்ட திட்ட அலுவலகம் மற்றும் வட்டார வளை மையங்கள் – மாவட்டக் கல்வி அலுவலகங்கள் (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) ஆகியவற்றில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த கணினிகள் மற்றும் கணினி சார்ந்த இதர பொருட்கள் ( IT Product) போன்ற மின் கழிவுகள் (E-Waste) அப்புறப்படுத்துதல் – சார்பு

பார்வை வேலூர் மாவட்டம், பெருமுகை, வில்லிஸ் நிறுவனத்தின் கடித நாள். 03.07.2024

.....

பார்வையில் காணும் கடிதத்தில், வேலூர் மாவட்டம், மாவட்ட திட்ட அலுவலகம் மற்றும் வட்டார வளை மையங்கள், மாவட்டக் கல்வி அலுவலகங்கள் (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி), அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த கணினிகள் மற்றும் கணினி சார்ந்த இதர பொருட்கள் IT Product) போன்ற மின் கழிவுகள் (E-Waste) வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு பள்ளிகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த கணினி மற்றும் கணினி சார்ந்த இதர பொருட்களை மீண்டும் பயன்படுத்தவே இயலாத அல்லது பொருட்களுக்கு தகுந்த உதிரிப் பாகங்கள் கிடைக்காது என்பதை பள்ளித் தலைமையாசிரியர்கள் ஆய்வு செய்து உபயோகப்படுத்த இயலாது என்பதை உறுதி செய்த பின் அப்பொருட்களை வில்லிஸ் நிறுவனத்திலிருந்து வரும் அலுவலர்கள் தங்கள் பள்ளியினை அணுகும்போது அப்பொருட்களை வழங்குமாறு வழங்கப்பட்ட பொருட்களின் விவரங்கள் வேலூர், காந்திநகர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாவட்ட திட்ட அலுவலகத்தில் சமர்பிக்குமாறு அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் சார்ந்த அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

09/07/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்ட திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளி கல்வி, காந்தி நகர், வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம் (தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக)
4. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், வேலூர் மாவட்டம்.
5. அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்

நகல்
வில்லிஸ் நிறுவனம்,
எண். 166, ஆட்டோ நகர், பெருமுகை,
வேலூர் மாவட்டம் – 632 009.